* அரச, தனியார்துறை ஊழியருக்கும் தோட்டத் தொழிலாளருக்கும் சம்பள உயர்வு
* தனியார்துறைக்கு வரிச்சலுகை
* பாதுகாப்புச் செலவினம் அதிகரிப்பு

# 68 பில்லியன் ரூபா துண்டு விழும் பட்ஜட்

புதிய வரவு செலவுத் திட்டம் இன்று பிரதமர் விஜேதுங்க வினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது. இம் முறை 'பட்ஜட்' இல் அரசுக்கு வருமானம் 87 பில்லியன் ரூபா எனவும் செலவு 156.6 பில்லியன் ரூபா எனவும் கணிக்கப்பட்டுள்ளது. இதன்படி 68.5 பில்லியன் ரூபா இம்முறை துண்டுவிழுகிறது இதைச் 'சர்க்கட்ட' வெளி நாட்டு உதவியையே அரசு நம்பியுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன இன்று சமர்ப்பிக்கப்படும் பட்ஜட்டில் அரச ஊழியருக்கு 500 ரூபா சம்பளம் உயர்வு, தனியார் துறைக்கு தாராள வரிச்சலுகை, தோட்டத் தொழிலாளருக்கு 75 ரூபா சம்பள உயர்வு ஆகியவை அடங்கியுள்ளதாக ஊகம் தெரிவிக்கப்படுகிறது. இதே வேளை கடந்த பட்ஜட்டை விட இம்முறை 15 பில்லியன் ரூபா பாதுகாப்புக்கென அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. இது இம்முறை பட்ஜட்டின் 25 சதவீதமாகும்.


பக்கங்கள் நான்கு　　விலை ரூபா: 5 - 00

# முரசொலி

முரசு 05 ஒலி 303 பிரசோற்பத்தி ஐப்பசி 26 (12 · 11 · 1991) செவ்வாய்


## கோடிக்கணக்கில் செலவிட்டும் முழுமையான பயனில்லையே

### 'சார்க்' மாநாடு பற்றி லலித் கண்டனம்

ஜனாதிபதி பிரேமதாஸஅரசு "சார்க்" மாநாட்டுக்கென கோடிக்கணக்கில் செலவழித்தென்ன. வெறுமனே மூன்று உறுப்புநாட்டுத்தலைவர்களின் நம்பெண்ண விஜயம் மாத்திரமே சாத்தியமாகியுள்ளது." என்று ஐ.தே.க அதிருப்தியாளர் குழுவைச் சேர்ந்தவரும், மாஜி அமைச்சருமான லலித் அத்துலத்முதலி தங் காலையில்நடைபெற்றகூட்டம் ஒன்றிலபேசுகையில் கூறினார் "பூட்டான் மன்னர் வரா

—04 ஆம் பக்கம் பார்க்க

★ யாழ்ப்பாணம் வரவும் விருப்பம், ஜனாதிபதியைச் சந்திக்கவும் உத்தேசம்

# விடுதலைப் புலிகளுக்குப் பதிலளிக்க கால அவகாசம் தேவை - அமைச்சர் தொண்டமான்

விடுதலைப்புலிகள் தனது கடிதத்துக்கு அனுப்பி வைத்துள்ள பதில்கடிதம் தொடர்பாக அமைச்சர் திரு எஸ். தொண்டமான் பதிலளிக்கத் தனக்கு காலஅவகாசம் தேவை எனக் கூறியுள்ளார். ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவுடனும் கடிதத்தை ஆராய்ந்தபின் சந்திப்பு நிகழ்த்தும் உத்தேசம் தனக்கு உள்ளதென்றும் தெரிவித்துள்ளார் என்றும் அறிவிக்கப்படுகின்றது.

"தமிழீழ விடுதலைப் புலிகள் எனது கடிதத்திற்கு அளித்துள்ள பதிலினால் நான் மிகுந்த நம்பிக்கையுடனிருக்கின்றேன். இதுபற்றிக் கலந்துரையாட வருமாறு அழைக்கப்பட்டால் யாழ்ப்பாணம் செல்லவும் தயாராக இருக்கின்றேன்"

அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் கொழும்பிலிருந்து வெளிவரும் அங்கிலத் தினசரி ஒன்றிற்கு அளித்துள்ள பேட்டியொன்றில் கூறியுள்ளார்.

"பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகளால் அடிப்படை நிபந்தனை வலியுறுத்தப்பட்டதாகப் பதில் கடிதத்தில் உள்ளதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

—04 ஆம் பக்கம் பார்க்க

## மணலாறில் விமானக்குண்டு வீச்சு

மணலாறு மாவட்டத்தில் நேற்றுக்காலை கடும் விமானக் குண்டு வீச்சும், ஷெல் தாக்குதலும் நடைபெற்றன.

நேற்றுக்காலை 7 மணியளவில் கொக்குத் தொடுவாய் பொதுமக்கள் குடியிருப்புகள் மீது 3 பொம்மர்கள் அகோர குண்டு வீச்சை நிகழ்த்தின ஓர் அவ்ரோவிமானம்ஹெலிக்கப்டர் என்பனவும் தாக்குதலை மேற்கொண்டன,

இதே வேளை மணலாறு முகாமிலிருந்தும் கடும் ஷெல் தாக்குதல் இடம்பெற்றது.

## வடக்குகிழக்கு வனப்பகுதிப் போர்

## 3 சீன பீரங்கிப் படகுகள்

## சுற்றிவளைப்பு;20 பேர் கைது

மட்டக்களப்பு - கல்லடிப் பகுதியை கடந்த புதன் கிழமை அதிகாலை படையினர் சுற்றி வளைத்து தேடுதல் மேற்கொண்டனர்.

சுமார் இருபது பேர் வரை முகாமுக்கு படையினரால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

—04 ஆம் பக்கம் பார்க்க

## இராணுவ விசேட பிரிவுக்கு ஆட்சேதம் புதியவர்கள் சேர்க்கப்படுகின்றனர்

## கடற்படையில் சேர்ப்பு

## மண்வெட்டிகள் அன்பளிப்பு

## இராணுவ விசேட பிரிவுக்கு ஆட்சேதம் புதியவர்கள் சேர்க்கப்படுகின்றனர்

120 பேர் கொண்ட புதிய பராதுருப்பு படைப பிரிவு ஒன்று ஸ்ரீலங்கா இராணுவத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இவர்களுக்கு கணேமுல்லவில் உள்ள விசேட படையினரின் தலைமையகத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் வடக்கு கிழக்கில் உள்ள காட்டுப் பகுதியில் விடுதலைப் புலிக

—04 ஆம் பக்கம் பார்க்க

## கடற்படையில் சேர்ப்பு

இம்மாத நடுப்பகுதியில் ஸ்ரீலங்கா கடற்படையில் 3 புதிய சீன பீரங்கிப்படகுகள் சேர்க்கப்படுகின்றன.

இப்பீரங்கிப் படகுகளில் 37 எம். எம், 25 எம். எம் பீரங்கிகள் பொருத்தப்பட்டுள்ளனவாம்.

தற்போது கடற்படையிடம் ரேடார் பொருத்தப்பட்ட 3 கண்காணிப்பு கப்பல்களும் 4

—04 ஆம் பக்கம் பார்க்க

## மண்வெட்டிகள் அன்பளிப்பு

யு. எஸ் உதவித் திட்டத்தின் கீழ் கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவு விவசாயிகளுக்கு 350 மண்வெட்டிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 06

## தமிழர் உரிமை பேணுதல் வேண்டும் என்கிறார் அனுரா

"இனப்பிரச்சினையை சாதகமாக வைத்து அரசியல் இலாபம் பெற சுதந்திரக் கட்சி ஒருபோதும் எண்ணியதேயில்லை" என்று திரு. அனுரா பண்டாரநாயக்கா கொழும்பில் நடைபெற்ற கலந்துரையாடலொன்றின் போது தெரிவித்தார்

—04 ஆம் பக்கம் பார்க்க

### தொடர்ந்தும் பொலிஸ் உஷார்

## அடையாள அட்டை வைத்திருக்க கொழும்பு வாசிகளுக்குப் பணிப்பு

கொழும்பில் தொடர்ந்தும் பாதுகாப்புப் படையினரை உஷார் நிலையில் இருக்குமாறு பாதுகாப்பு அமைச்சு பணித்துள்ளது.

தொடர்ந்தும் கொழும்பிற்குள் நுழையும் வாகனங்களை சோதனையிடுமாறு பொலிஸாருக்குப்பணிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் வெளியே செல்லும் போது தம்முடன் அடையாள அட்டைகளையும் எடுத்துச் செல்லுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

## க. பொ. த. (உ. த) பரீட்சை அடுத்த ஏப்ரலில் நிகழும்

க.பொ.த.உயர்தரப் பரீட்சை அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் நடாத்தப்படும் என்றும் இப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் 91 ஆகஸ்டில் தோற்றும் மாணவராகவே கருதப்படுவர்

—04 ஆம் பக்கம் பார்க்க

## வெளிவாரிப்பட்டப் பரீட்சை யாழ் நகரில் நடைபெறாது

முன்னர் திட்டமிட்ட படி வெளிவாரிப் பட்டப் படிப்பு பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடைபெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது, இப்பரீட்சையை நடாத்தும் பேராதனை பல்கலைக்கழகம் நேற்று சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் மூலம் யாழ் அரசாங்க அதிபருக்கு இதை அறிவித்துள்ளது வட பகுதிநிலைமை காரணமாகவே இப்பரீட்சை நடைபெறவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது 66

## 740 மெற்றிக்தொன் உரம் நேற்றுக் கப்பலில் வந்தது

740 மெற்றிக் தொன் உரம் நேற்று தைப்பான் கப்பலில் கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவை 'கெயர்' ஸ்தாபனத்துக்காக விசேடமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

...04ஆம் பக்கம் பார்க்க

## நேர்முகப்பரீட்சையில் தமிழ் சான்றிதழ் ஏற்க மறுப்பு

கண்டியில் கடந்த மாதம் 23ஆம் திகதி நடைபெற்ற வர்த்தக முகாமைத்துவ நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்த தமிழ் மாணவர்களின் தமிழ் பிறப்புச்சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனத்தெரிவிக்கப்பட்டதையடுத்து சிங்கள மொழி பெயர்ப்பு இணைக்கப்பட்டது. அரச கரும மொழியாக தமிழ் மொழி இருந்தும் பரீட்சை நடாத்துநர்கள் இவ்வாறு நடந்து

—04ஆம் பக்கம் பார்க்க

## ஒவ்வொரு ஐந்து நிமிடமும்..

ஒவ்வொரு ஐந்து நிமிடமும் அமெரிக்காவில் நான்கு பேரும் இங்கிலாந்தில் மூன்று பேரும், இந்தியாவில் ஒருவரும் புகை பிடிப்பதால் ஏற்படும் புற்றுநோயால் இறந்து வருவதாக ஆய்வறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது. (22)

● லண்டன் "ரிபியூஜ்" அறிக்கை

# விசாரணையின்றி தமிழ்க்கைதிகள்; அடிப்படை உரிமையை மீறும்செயல்

களுத்துறைச்சிறையில் தமிழ் அரசியல் கைதிகள் விசாரணையின்றித் தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டிருப்பதுஅடிப்படை மனித உரிமைகளை மீறும் ஒருசெயல் என லண்டனிலுள்ள இலங்கைத்தமிழ் அரசியற் கைதிகளின் சங்கமான 'ரிபி யூஜ்' அறிக்கை யொன்றில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ரிபியூஜ் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

இலங்கை சிறைகளிலும் தடுப்பு முகாம்களிலும் உள்ள எல்லா அரசியற் கைதிகளும் விசாரணைக்கு நிறுத்தப்பட வேண்டும் அல்லது உடனடியாக விடுவிக்கப்படவேண்டும் எனவும் அக்கடிதத்தில் 'ரிபி யூஜ்' கேட்டுள்ளது.

## பேத்தி கொலை பேரன் கைது

மகாவெல பொலிஸ் பகுதியில் பேரன் ஒருவர் தனது பேத்தியாரைக் கொலை செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கழுத்தை வெட்டிக் கொலை செய்த பேரனைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## க.பொ.த. சாதாரணதரப்பரீட்சை வடக்கிலும் நடைபெறும்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரம் பரீட்சை டிசம்பர் மாதம் 9 ஆம் திகதி யாழ் மாவட்டம் உட்பட வடக்குக் கிழக்கின் அனைத்துப் பகுதிகளிலும் ஆரம்பமாகுமெனப் பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல நேற்று உத்தியோக பூர்வமாக அறிவித்தார்,

இப்பரீட்சை டிசம்பர் 18 ஆம் திகதி வரை நடைபெறும். மொத்தம் சுமார் 5 லட்சம் பரீட்சார்த்திகள் நாடு முழுவதிலும் பரீட்சைக்குத் தோற்றுவர்.

யாழ் கல்விப் பணிப்பாளர் கொழும்பில் பரீட்சைத் திணைக்கள ஆணையாளரைச் சந்தித்துப் பரீட்சையை வடக்கிலும்நடாத்துமாறுகேட்டுக் கொண்டதனையடுத்தே இந்த இறுதி முடிவு எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

வடக்கிலும், கிழக்கிலும் பரீட்சையைத் திட்டமிட்டவாறு நடாத்த அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளதாகவும் பரீட்சை ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

### பல்கலைக்கழக கல்லூரி

வடமாகாண பல்கலைக்கழக கல்லூரி வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் இம்மாதம் 20 ஆம் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் வடமாகாண பல்கலைக்கழகக் கல்லூரியை வவுனியா காமினி சிங்கள மகா வித்தியாலயத்திலேயே நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வந்தது.

முதலில் இக் கல்லூரியில் க. பொ. த உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி பெற்ற 100 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

## மட்டு. சென். மைக்கலுக்கு ':.பயர்ப்ளே' பெருமை விருது

நெஸ்ட்லே லங்கா லிமிட்டெட் அனுசரணையுடன் இலங்கை உதைபந்தாட்டச்சங்கம் நடாத்திய தேசிய பாடசாலைகளுக்கான மைலோ கிண்ண இறுதி ஆட்டத்தில் கடந்த வருட சாம்பியனான கொழும்புஸாஹிராக் கல்லூரியை எதிர்த்து ஆடிய மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரி பெனால்டி (3 - 2) அடிப்படையில் தோல்வியுற்றது

கொழும்பு பெட்றிஸ் மைதானத்தில் இவ் இறுதி ஆட்டம் நடைபெற்றது பலதரப்பட்ட சிரமங்களுக்கும் மத்தியில் கொழும்பு சென்று அபாரமாக நேர்த்தியாக விளையாடியமைக்காக புனித மைக்கல் அணிக்கு பெருமை மிக்க '்ஃபயர் பிளே' விருது வழங்கப்பட்டது. (16)

## பயிலுநர் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் இல்லை!

1989 07 13 அன்று வர்த்தமானி அறிவித்தலுக்கமைய உதவி அரசாங்க அதிபர் பிரிவு அடிப்படையில் நியமிக்கப்பட்ட பயிலுநர் ஆசிரியர்கள் வேறு எந்த உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கும் மாற்றபபடக்கூடாது என பணிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மாறாக எப் பயிலுநர் ஆசிரியர்களும் மாற்றப்பட்டிருப்பின் உடனடியாக அவர்களை முன்னைய இடங்களுக்கு மாற்றுமாறும் பணிக்கபபட்டுள்ளது.

அவ்வாறு நியமனத்தின் பின் புதிய இடத்திற்கு இடமாற்றப் பட்டிருக்கும் பயிலுநர் ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குவது சட்டவிரோதம் என்றும் கல்விச் சேவைக்குழு தலைவர் பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளார். (15)

## தெருச்சுற்றியார் அவதானித்த மாவீரர் அலங்காரங்கள்

திடீர் திடீரென்று கறையான் புற்றுக்கள் கிளம்புவது போல் மாவீரர் அலங்காரங்கள் வீதிகளை அலங்கரிக்கத் தொடங்கி விட்டன வெலிங்டன் படமாளிகைச் சந்தியில் மாபெரும் அலங்கார வளைவுகளும், பந்தல்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

"இந்த மண் எங்களின் சொந்தமண் இதன் எல்லைகள் மீறி யார் வந்தவன்?" என்ற வரிகள் நெஞ்சைத் தொட்டு நிற்பதுடன், தமிழீழ எல்லைகளும் பெரிய படத்தில் குறிக்கப்பட்டுள்ளன

அரியாலை தபால் கட்டைச் சந்தியில் மாபெரும் வளைவுகளும், பந்தல்களும் பெரிய அளவில் போடபபட்டு வருகின்றன. இதற்குப் பக்கபலமாக அப்பகுதி மக்கள் இணைந்து செயல்படுகின்றனர்.

கோண்டாவில் சந்தியில் தமிழீழ பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது போன்ற வளைவுகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. மக்கள் அலங்கார வளைவுகளை அமைத்து வருவதில் உணர்வு பூர்வமாக ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

— தெருச்சுற்றியார்

## மன்னாரில் கட்டுப்பாடுகளைத் தளர்த்தக்கோருகிறார் அரச அதிபர்

மன்னார் பகுதியில் மீன் பிடிக்க விதிக்கப்பட்டுள்ள தடையைத் தளர்த்துமாறு மன்னார் அரச அதிபர் அரசாங்கத்தைக் கோரியுள்ளார்.

மீன்பிடிக்க விதிக்கப்பட்டுள்ள கடல் எல்லையை அதிகரிக்குமாறும், பாதிக்கப்பட்ட மீனவருக்கு நிதி மற்றும் கடன் வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க நடவடிக்கையெடுக்குமாறும் மன்னார் அரச அதிபர் வே. கணேஷ் மீன்பிடி அமைச்சர் யோசப் மைக்கல் பெரேராவைக் கோரியுள்ளார்.

## அரசியல் அவதானிப்புக்கள்:

ஐக்கிய தேசியக் கட்சி 'அதிருப்தியாளர்' தங்களை கட்சியிலிருந்து வெளியேற்றியமையை எதிர்த்து கொழும்பு உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுமீதான விசாரணையில் ஐக்கியதேசியக்கட்சி சார்பாக அஜாராகியிருக்கும் சிரேஷ்ட சட்டத்தரணியின் முக்கியமான வாதங்களை இங்கு தருகிறார் அரசியல்அவதானி. எஸ். ஜி. எம்.

### கட்சிக்குள்ளிருந்து கொண்டேயே கட்சிக்கொள்கைக்கு முரணான நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது

- சொக்சி

## மாணவர்களுக்கு

காரைநகர் கொத்தணியைச் சேர்ந்த 14 பாடசாலை மாணவர்களுக்கு மே, யூன், யூலை மாதங்களுக்குரிய மதிய உணவு முத்திரை 17ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் வழங்கப்படும் என கொத்தணி அதிபர் செ. தேவதாசன் அறிவித்துள்ளார்.

## தெரிவுப்பரீட்சை முடிந்தபின்

## 6000 இலங்கையர்களை தாய்வான் நாடு கடத்தும்

தாய்வானில் சட்டவிரோதமாகத் தொழில் செய்துவரும் 6000 இலங்கையர்களும் விரைவில் திருப்பி அனுப்பப்படவுள்ளனர்.

இவர்கள் எதுவித தொழில் அனுமதிப்பத்திரங்களுமின்றி அங்கு தொழில் செய்து வருகின்றனர்.

இவர்களைத்திருப்பியனுப்புவது தொடர்பான தகவல்களை தாய்வான் அரசு இலங்கைக்கு ஏற்கனவே அறிவித்துள்ளது. (22)

## தமிழீழ மாவீரர் நாள் நினைவுகளின் முக்கியகணிப்பு

1) 1991 -11- 15 இலிருந்து 1991 - 11 - 21 - வரை மாவீரர் எழுச்சிவாரமாகக் கொண்டாடப்படும்.

திகதி நள்ளிரவு 12. 02 மணிக்கு மாவீரர் சுடர் ஏற்றப்படும்,

7) 1991 - 11 - 27 ஆம்

## நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது

\- சொக்சி

''ஒருவர் தமக்கு அரசியலமைப்பு உரிமைகளைப் பிரயோகிக்க வேண்டுமெனின் அவர் கட்சியை விட்டு விலக வேண்டும். கட்சிக்குள்ளிருந்து கொண்டே கட்சிக் கொள்கைகளுக்கு முரணான நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது''

மேற்கண்டவாறு ஐ. தே. க. அதிருப்தியாளர்கள் லலித் அத்துலத் முதலியும் ஏனையோரும் தாம் கட்சியிலிருந்து விலக்கப்பட்டதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் முதல் நான்கு பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கே. என். சொக்சி வாதிட்டார்.

அவர் முறைப்பாட்டுக்காரர்கள் ஜனாதிபதிக்கு எதிரான அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணையில் ஜனாதிபதிக்கு எதிராக கட்சிக்குள் எதுவித புகார்களையும் எழுப்பாது கையொப்பமிட்டதைக் குறிப்பிட்டு, மனுதாரர்களின் சட்டத்தரணி குறிப்பிட்டது போல் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் அவ்வாறான உரிமை இருப்பதை நாம் ஏற்கவில்லையென்றும் தெரிவித்தார்.

''மேலும் அவ்வாறு ஒரு விசேட உரிமை பாராளுமன்ற உறுப்பினருக்கு இல்லை. இது கட்சியிலிருந்து நீக்கப்படுவதை நியாயப்படுத்தும் அப்பட்டமான துரோகமாகும்'' என்றார்.

இத்தீர்மானம் ஜனாதிபதியை பதவி இறக்க முயல்வது மட்டுமின்றி கட்சியின் செல்வாக்கையும் குறைக்கும். ஒரு கட்சியின் செல்வாக்கு அதன் தலைவரினால் பிரயோகிக்கப்படுகின்றது. ஆகவே தலைவரைத் தாக்குவது கட்சியைத் தாக்குவதாகும் என்றும் திரு. சொக்சி சமர்ப்பித்தார்.

தேவதாசன் அறிவித்துள்ளார்.

## தெரிவுப்பரீட்சை முடிந்தபின்
## அனுமதி அட்டை வந்தது

விளையாட்டுத்துறை அதிகாரிகள் பதவிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து நூற்றுக்கணக்கானோர் விண்ணப்ப

...கின்றனர்.

இவர்களைத்திருப்பியனுப்பு

தாரிகள் 100 ரூபாய் யாழ் செயலகத்தில் செலுத்தி விண்ணப்பித்திருந்தனர்

அவர்களுக்குரிய அனுமதி அட்டைகளும் நேரகுசியும் நேற்று இங்கு வந்தடைந்தன. ஆனால் தெரிவுக்கானபோட்டிப் பரீட்சை கடந்த மாதம் 26 ஆம் திகதி நடைபெறும்

அந்நாட்களில் கிளிநொச்சி, வவுனியாப் பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தமையும் குறிப்பிடத்தக்கது

## மின் கட்டணம் அதிகரிப்பு

அடுத்த மாதம் முதல் மின் கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளன.

1990 ஏப்ரலில் மின் கட்டணங்கள் இறுதியாக அதிகரிக்கப்பட்டிருந்தன.

1) 1991-11-15 இலிருந்து 1991 - 11 - 21 - வரை மாவீரர் எழுச்சிவாரமாகக் கொண்டாடப்படும்.

2) 1991 - 11 - 21 - 1991- 11 - 27 வரை மாவீரர் வாரமாகக் கொண்டாடப்படும்.

3) 1991 - 11-21 ஆம் திகதி காலை 8. 00 மணிக்கு தேசியக் கொடி ஏற்றப்படும்.

4) 1991- 11-22 இலிருந்து 1991 - 11 - 27 வரை மு. ப. 8. 30 மணிக்கு தேசியக்கொடி வணக்கம் செலுத்தப்படும்.

5) 1991 - 11 - 26 ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு மாவீரர் நினைவொலி எழுப்பப்படும்.

6) 1991 - 11 - 26 ஆம் திகதி நள்ளிரவு 12.02 மணிக்கு மாவீரர் சுடர் ஏற்றப்படும்,

7) 1991 - 11 - 27 ஆம் திகதி மாலை 4. 00 மணிக்கு மாவீரர் நினைவுக் கூட்டம் நடைபெறும்.

## சூரன்போர்

இன்று 12 ஆம் திகதி அம்பன், குடாரப்பு ஆகிய முருகன் ஆலயங்களில் பிற்பகல் 4 மணிக்கு சூரன் போர் நிகழ்ச்சி இடம் பெறும்.

இக் கோயில்களில் நூற்றுக்கணக்கான மக்கள் ஆலயத்தில் தங்கியிருந்து கந்தசஷ்டி விரதத்தை அனுஷ்டித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# தெற்கில் 540 வைத்தியசாலைகள் மூடப்பட்டன

# வைத்தியர் வேலை நிறுத்தம் தொடர்கிறது

தற்பொழுது நடைபெற்று வரும் உதவி, பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களின் வேலை நிறுத்தம் ஆறாவது நாளாகவும் தொடர்வதாக அறிவிக்கப்படுகின்றது.

இவ்வேலை நிறுத்தம் காரணமாக தென்பகுதியில் 540 கிராமிய வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளன.

இந்த வேலை நிறுத்தத்தைக் கைவிட்டுவிட்டு வைத்தியர்கள் உடனடியாகக் கடமைக்குத் திரும்ப வேண்டுமென சுகாதார அமைச்சு பணித்துள்ளது - ஆனால் அதனை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளோர் புறக்கணித்துள்ளனர்.

வேலை நிறுத்தப் போராட்டத்தின் அடுத்த நடவடிக்கை குறித்து இவர்கள் ஆராயவுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

# லட்சக்கணக்கில் கண்ணிவெடிகள் - குவைத் பாலைவனப் பகுதியில் இன்னும் உள்ளன!

மழை விட்டாலும் தூவானம் நிற்கவில்லை. இந்த நிலையே ஈராக்கின் ஆக்கிரமிப்புக்கு உள்ளான குவைத்தில் தற்பொழுது காணப்படுகின்றதாம்.

குவைத்திலிருந்து நெருக்குதல் காரணமாக ஈராக் வெளியேறிய போதிலும் மீண்டும் தலையெடுக்க முடியாத படியான நடவடிக்கைகளை அது அங்கு செய்துவிட்டே திரும்பியுள்ளமை தற்பொழுது வந்து கொண்டிருக்கும் தகவல்கள் மூலம் நிருபணமாகிக் கொண்டிருக்கிறது

குவைத்தின் பாலைவனப் பகுதிகளில் லட்சக்கணக்கில் கண்ணிவெடிகளையும், குண்டுகளையும் புதைத்துவிட்டே ஈராக் அங்கிருந்து வெளியேறியிருந்தது. இக்குண்டுகளை செயலிழப்பிக்கும் பணியில் 12 நாடுகளைச்சேர்ந்த வெடிகுண்டு நிபுணர்கள் தற்பொழுது ஈடுபட்டுள்ளனர். என்றாலும் இக்குண்டுகளை முற்றாக அகற்ற இரண்டு வருட காலமாவது எடுக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

வளமான எண்ணெய்க்கிணறுகள் அனைத்துக்கும் ஈராக் தீ மூட்டியமை கற்பனைக்கு எட்டாத பொருளாதார பாதிப்பை குவைத்துக்கு ஏற்படுத்தியுள்ளது 10 நாடுகளைச் சேர்ந்த 27 இயந்திரங்களினதும் 10 ஆயிரம் தொண்டர்களினதும் உதவியுடன் 8 மாதங்களுக்குப் பின்னர் அத் தீ தற்பொழுது அணைக்கப்பட்டுவிட்டது - எனினும் முற்றாக அணைக்கப்பட்ட எண்ணெய்க்கிணறுகளில் திடீர் திடீரென மீண்டும் எழும் தீச் சுவாலை அபிவிருத்தி வேலைகளுக்கு மேலும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது

● எதிர்க் கட்சிகள் அரசிடம் கோரிக்கை

# சார்க் ஒத்திவைப்பு தொடர்பாக பாராளுமன்றத்தில் விவாதம்!

சார்க் மகாநாடு கடைசி நேரத்தில் ஒத்தி வைக்கப்பட்டது தொடர்பாக ஆராய பாராளுமன்றத்தில் விவாதம் ஒன்றை நடாத்த ஏற்பாடு செய்யுமாறு எதிர்க்கட்சிகள் அரசைக் கோரியுள்ளன.

பல கோடி ரூபா செலவில் சார்க் மகாநாட்டிற்கு ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பொது மக்களின் பணத்தைக் கொண்டு செய்யப்பட்ட செலவு இது சார்க் மகாநாடு ஒத்திவைக்கப்பட்ட காரணம் உட்பட சகல விடயங்களையும் பொதுமக்கள் அறிய வேண்டும்.

அதற்காகவே பாராளுமன்றத்தில் விவாதமொன்றை நடாத்த வேண்டும் எனவும் எதிர்க்கட்சிகள் கேட்டுள்ளன,

## தீவுப்பகுதியில் சிக்கியுள்ள ஆசிரியர்களை மீட்க முயற்சி

தீவகத்தில் சிக்கியுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்களது விவரங்களை இராணுவத்திடம் அறிந்து தமக்கு தெரியப்படுத்துமாறு இவ் ஆசிரியர்களது பெற்றோர் வேலணைக் கோட்டக் கல்வி அதிகாரியிடம் கோரியுள்ளனர்.

வேலணைக் கோட்டக் கல்வி அதிகாரி சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையுடன் இது தொடர்பாகத் தொடர்பு கொண்டுள்ளார்.

நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் மூன்று பெண் ஆசிரியர்களும், அனலைதீவு சதாசிவம் மகாவித்தியாலயத்தில் மூன்று ஆண் ஆசிரியர்களும் எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தில் மூன்று ஆண் ஆசிரியர்களும் இவ்வாறு உள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது

இவ் ஒன்பது ஆசிரியர்களில் ஏழு பேர்கள் யாழ்ப்பாணத்தையும், ஒருவர் நாசந்தனையையும், மற்றவர் காரை நகரையும் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் என தெரிவிக்கப்படுகிறது, (15)

## பகிரங்கத் தண்டனையை நிறுத்த பாகிஸ்தானிடம் கோரிக்கை

பாகிஸ்தானில் பொதுமக்கள் முன்னிலையில் பகிரங்கமாக மரணதண்டனை நிறைவேற்றப்படுவதை நிறுத்துமாறு லண்டனில் உள்ள சர்வதேச மன்னிப்புச்சபை பாகிஸ்தான் அரசிடம் கேட்டுள்ளது.

சுமார் இருபது கைதிகள் விசேட நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டதாகவும் ஆனால் அவர்கள் நியாயமான முறையில் விசாரிக்கப்படவில்லை எனவும் மன்னிப்புச்சபை தெரிவித்தது

★ ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கிய

# விவசாய ஊக்குவிப்புப் பணம் வட-கிழக்கிற்கு இம்முறை இல்லை!

உப உணவுப் பயிர்ச் செய்கைக்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஊக்குவிப்புப் பணம் மற்றும் கடனுதவிகள் வட கிழக்கு மாகாணத்திற்கு இம்முறை ஒதுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து 'நீண்டகாலப்

கொக்கோ, கறுவா, வாழை பஷன், மா, தோடை, எலுமிச்சை, அன்னாசி, றம்புட்டான் ஆகியவற்றின் செய்கையை விருத்தி செய்வதற்காக ஆசிய அபிவிருத்தி

## மட்டுநகர் யுவதிகள் இருவர்

இசைக்கு மொழியில்லையென்பார்கள். ஆனால், இசையை உணர்ந்து அனுபவிக்க மொழி துணை புரிகிறது. கவிதையோ, பாடலோ இசை வடிவம் பெறும்போது, இரண்டையும் நாம் நன்கு ரசிக்கின்றோம். கவிதை நன்றாக அமையின் இசைமெருகேறும். இசைமெருகேறுவதற்கு கவிதை உறுதுணை புரிகிறது.

இசையின் இனிமையை உணரவைக்கும் வகையில் இன்றும் நிலைத்து நிற்கக் கூடிய கவிதைகளையும், பாடல்களையும் இயற்றியவர் கவிஞர் கண்ணதாசன். அவரது பேட்டியின் சிலபகுதிகளை இங்கு தருகிறோம்.

## கவிதைக்கு யாப்பிலக்கணம் வேண்டும் அடுக்கு மொழி கவிதையாகாது

—கண்ணதாசன்

கேள்வி:- சிறந்த கவிதையென்று நிர்ணயிக்கும் அளவுகோல் எது?

கவிஞர்: கருத்தும், யாப்பும்தான்.

கே: யாப்பைக் கொண்டு தான் கவிதையை அளவிட வேண்டுமா?

க: யாப்பில்லாமல் கவிதை கிடையாது. கருத்தும் யாப்பும் சேர்ந்தது தான் கவிதை. கருத்து மட்டும் கவிதையாகாது. அதை வேறு என்னவென்று சொன்னாலும் கவிதை என்று மட்டும் சொல்ல முடியாது. யாப்பு 'ரிதத்' துக்காகத்தான் எல்லாவற்றிலும் ஒரு 'ரிதம்' உண்டு. இந்த பிரபஞ்சமே ஒரு ரிதத்துடன்தான் இயங்குகிறது. குடிக்காமல், நிதானத்துடன் ஒருவன் நடந்தால் அவன் தப்படிகளின் இடைவெளி ஒரே சீராகத்தான் இருக்கும். சரியாக மூடப்படாத பைப்பில் சொட்டுச் சொட்டாகத்தான் தண்ணீர் விழுகிறது. ஒரு துளிக்கும் இன்னொரு துளிக்கும் இடையிலான duration ஒரு தாள கதியுடன் ஒன்றாகவே இருக்கும்.

கே: யாப்பில்லாமல், ஓசை நயத்துடன், சீர், தளை கொண்டு கவிதை செய்யலாமா? எதுகை மோனை அவசியமா?

க: கவிதை நமக்குப் படித்தபின் ஞாபகத்துக்கு வர வேண்டும். எதுகையும், மோனையும் இதற்குத்தான். நாம் படிக்கக்கூடிய எந்த வசன கவிதையையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள முடியாது. ஆனால் கம்பனை நினைவில் வைத்துக் கொள்ளலாம்.

கே: ஓசை நயத்துடன், யாப்பில்லாமல் கவிதை எழுத முடியுமா?

க: ஓசை நயமே யாப்புத்தான்.

கே: சினிமாப் பாட்டுக்கள்?

க: அவை இசைப் பாடல்கள். ''இழுக்குடைய பாட்டுக்கு இசை நன்று'' அது கவிதையாகாது. கவிதையை இசைப் பாட்டாக்கலாம். ஆனால் எல்லா இசைப்பாடல்களும் கவிதையாகி விடாது. யாப்பில் அடங்கினால் தான் அதைக் கவிதையாக ஏற்க முடியும். மு. க. அடுக்குச் சொல்லை அள்ளி வீசுகிறார். விருந்து-மருந்து-அருந்து என்றெல்லாம், ஆனால் அதில் யாப்பில்லை. அதனால் அது கவிதையாகாது. எல்லாவற்றையும் கவிதை என்றால் கம்பனுக்கும் மற்றவனுக்கும் வித்தியாசம் வேண்டாமா? திறமை இல்லாமல் புதுக்கவிதை எழுதலாம்.

கே: வசன கவிதை பற்றித் தங்கள் கருத்து?

க: பாரதியார் முதற்கொண்டு யார் யாரோ வசன கவிதை எழுத முற்பட்டார்கள். ஆனால் வசனம் ஆண்; கவிதை பெண். வசனம் கவிதை இரண்டிலும் சேராத அலி. அதை எப்படி ஏற்றுக் கொள்வது?

கே: உங்கள் ''புஷ்ப மாலிகா?''

க: ''புஷ்ப மாலிகா'' வசன நாடகதான்

...பாலயத்தில் மூன்று ஆண் ஆசிரியர்களும் இவ்வாறு உள்

...கைக்கான ஆசிய அபிவிருத்தி

...வங்கியினூடாக ஊக்குவிப்புப் பணம் மற்றும் கடனுதவிகள் வடகிழக்கு மாகாணத்திற்கு இம்முறை ஒதுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து 'நீண்டகாலப் பயிர்கள்' அபிவிருத்தித் திட்டப் பணிப்பாளரிடம் புகாரிடப்பட்டுள்ளது.

நீண்டகாலப் பயிர்களான மரமுந்திரிகை, மிளகு, கோப்பி, கொக்கோ, கறுவா, வாழை பஷன், மா, தோடை, எலுமிச்சை, அன்னாசி, றம்புட்டான் ஆகியவற்றின் செய்கையை விருத்தி செய்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி பெருந்தொகை பணத்தை ஊக்குவிப்புப் பணமாகவும், கடனாகவும் விவசாயிகளுக்கு வழங்கவென இலங்கை அரசிடம் கையளித்துள்ளது.

இந் நிதி கேகாலை, கண்டி, மாத்தளை, பதுளை, மொனராகலை மாவட்டங்களுக்கு மட்டுமே இம்முறை ஒதுக்கப்பட்டுள்ளது.

## மட்டுநகர் யுவதிகள் இருவர் பம்பலப்பிட்டியில் கைது!

கொழும்பு கூட்டுப்படைத் தலைமையகக் குண்டு வெடிப்புத் தொடர்பாக இருதமிழ் யுவதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த இந்த இரு தமிழ் யுவதிகளும் கொழும்பிலுள்ள ஒரு அமைச்சில் கடமைபுரிபவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பம்பலப்பிட்டியில் வைத்து இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

## பரம்பரை வைத்தியர் விவரங்கள் விரைவில் நூலாக வெளிவரும்

ஆயுர்வேத வைத்தியசபை நாட்டில் உள்ள பரம்பரை வைத்தியர்கள் தொடர்பான விவரங்களை உதவி அரசாங்க அதிபர் மட்டத்தில் திரட்டப்பட்டு வருகிறது.

இவ் விவரங்களை ஒரு நூலாக வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது (08)

## கூட்டம்

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்க புதிய இயக்குநர் சபை உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான பொதுக்கூட்டம் இம் மாதம் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

## 'அறுவை' செய்யப்பட்ட 'சார்க்' நாற்காலிகள்!

சார்க் மகாநாட்டுப் பிரதிநிதிகள் அமர்வதற்கென ஒவ்வொன்றும் 20 ஆயிரம் ரூபா செலவில் விசேட நாற்காலிகள் செய்யப்பட்டிருந்தன.

இந்த சுழல் நாற்காலிகள் ஒவ்வொன்றும் அதிக உயரமானவையாக இருந்தன—இவற்றில் பிரதிநிதிகள் சுயமாக ஏறி அமரமுடியாதவையாக அவை இருந்தன. இதனால் அவசர அவசரமாக அந் நாற்காலிகள் மண்டபத்திலிருந்து வெளியே எடுக்கப்பட்டு அவற்றுக்கு பிரபல தளபாட 'நிபுணர்களால்' அறுவை சிகிச்சை' அளிக்கப்பட்டது.

பூட்டான் மன்னருக்கென சிம்மாசன அமைப்பில் விசேட நாற்காலியொன்றும் அங்கு அமைக்கப்பட்டிருந்தது மன்னர் வராததினால் அது ஒரு காட்சிப் பொருளாகவே அங்கு காணப்பட்டது. (16)

## விரிவுரைகளை நடாத்தவென 116 ஆசிரியர்கள் விடுவிப்பு

ஆசிரிய கல்வி தொடர்பான விரிவுரைகளை நிகழ்த்துவதற்கு வடகிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் இருந்து 116 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 29 பேர் யாழ் மாவட்டப் பாடசாலைகளைச் சேர்ந்தவர்கள்.

வாரத்தில் மூன்றுநாட்களுக்கு இக்கல்வித் திட்டம் ஆரம்பித்த தினத்திலிருந்து 3 வருடங்களுக்கு இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். (15)

...வசனம் ஆண்; கவிதை பெண், வசனம் கவிதை இரண்டிலும் சேராத அலி. அதை எப்படி ஏற்றுக் கொள்வது?

கே: உங்கள் ''புஷ்ப மாலிகா?''

க: ''புஷ்ப மாலிகா'' வசன நூல்தான்

கே: தளை தவறி, ஆனாலும் ஓசை நயத்துடன் வெண்பா எழுதலாமா?

க: கூடாது. அதனால் தான் நான் சில வெண்பாக்கள் எழுதிவிட்டு நிறுத்தி விட்டேன். வெண்பா இலக்கணம் கடினமானது. இதுவரை ''நளவெண்பா'' 'முத்தொள்ளாயிரம்'' இன்னும் ''அகலிகை வெண்பா'' போன்ற மிகச் சில வெண்பா நூல்களே வந்துள்ளன. தவறான வெண்பாக்களை எழுதிப் புகழேந்தியைக் கொல்ல வேண்டுமா?

கே; யாப்பில் பழைய மரபை அழிக்காமல் புதிய வகைகளைச் சேர்க்கலாமா?

க: சேர்க்கலாம் ஆனால் இலக்கண எல்லையை விரித்துக் கொண்டே போவது வெங்காயத்தை உரிக்கிற காரியம் கொஞ்சம் உரித்ததும் குழம்பில் போடுவது தான் மரியாதை' உரித்துக்கொண்டே போனால் அப்புறம் ஒன்றும் மிஞ்சாது.

கே! நல்ல உணர்ச்சியுடன் மரபில்லாமல் எழுதினால் அது கவிதையாகாதா?

க: உணர்ச்சி ஒழுங்காக இருந்தால் மரபு தானாகவே வந்து விடுகிறது.

கே: இலக்கண மரபில்லாமல் ஏன் கவிதை எழுதக் கூடாது?

க: இப்படியெல்லாம் செய்துகொண்டே போனால் எது கவிதை, எதுகவிதையில்லை என்றே கடைசியில் கண்டுபிடிக்க முடியாமல் போய்விடும். பரதநாட்டியம் என்றால் ஒரு தாள கதியுடன் மரபுடன் ஆடவேண்டும் இஷ்டத்துக்கு தா, தை என்று குதித்தால் அது பரத நாட்டியம் ஆகுமா? ஒவ்வொரு விஷயத்தையும் இப்படித்தான் செய்ய வேண்டும் என்ற நியதி உண்டு.

(வளரும்)

## உலக அரங்கில்

### டுப்ரோனிக் மீது தொடர்ந்து தாக்கு

குரோவேஷியாவின் அட்ரியாட்டிக் கடல் துறைமுக நகரான டுப்ரோனிக் மீது நேற்று நான்காவது நாளாகவும் யூகோ. சமஷ்டி இராணுவ, கடற்படையினர் தாக்குதல் நடாத்தினர்.

இந் நகரப் பகுதியில் யுத்த நிறுத்தம் செய்யுமாறு குரோவேஷியா கேட்டுள்ள போதிலும் தாக்குதல் ஓய்ந்தபாடில்லை இதுவரை இந்நகரில் 11 பேர் பலியானதாக தெரிவிக்கப்படுகிறது.

### பேச்சுக்கு பி. எல். ஓ. நிபந்தனை

இஸ்ரேலுடன் மீண்டும் பேச்சு நடாத்த பாலஸ்தீன விடுதலை இயக்கம் நிபந்தனைகளை விதித்துள்ளது

புதிய யூதக் குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும், புதிய பேச்சுக்கள் 3 மாதத்திற்கு மேல் நீடிக்கக் கூடாது. இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீன பிரதேசங்களில் இடைக்கால நிர்வாகம் அமைய வேண்டும், இது பாலஸ்தீன இடைக்கால அரசுக்கு வழி செய்ய வேண்டும், எந்த புதிய சமாதான உடன்பாடும் இஸ்ரேல் பாலஸ்தீன தரப்பினராலேயே கைச்சாத்திடப்படவேண்டும் என்ற ஐ. நாவின் சாசனத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் ஆகியவையே அந் நிபந்தனைகளாகும்.

### பிலிப்பைன்ஸ் வெள்ளம் 3, 400 பலி

மத்திய பிலிப்பைன்ஸின் ஓர்மோக் கரையோர நகரில் திடீர் என ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினாலும் புயலினாலும் 3, 400 பேர் பலியாகியுள்ளனர். 2,000 பேரைக்காணவில்லை. இறந்தவர்கள் பாரிய குழிகளினுள் ஒன்றாகப் போட்டு புதைக்கப்பட்டனர்.

எழுந்த பெரும் அலைகளினால் கடலினுள் அள்ளப்பட்டுச் சென்ற பலரை சுறா மீன்கள் இழுத்துச் சென்றதாக கூறப்படுகிறது அலைகள் 12 அடிக்கு உயர்ந்ததாகக் கணிப்பிடப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாககரையோரகாடுகள்அழிக்கப்பட்டமையே இவ்வனர்த்தம் ஏற்படக் காரணம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

### அமெரிக்க ஜனாதிபதி சென்ற விமானத்தை தாக்க முயற்சி

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஜுக்கும் உயிராபத்து உருவாக்க திட்டமிடப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

அவர் ரோமில் நிகழும் நேட்டோ உச்சி மாநாட்டிற்கு செல்லும் விமானத்தை பயங்கரவாதிகள் தாக்கக் கூடும் என விமானத்திலிருந்த அதிகாரிகளால் எச்சரிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. 'எயர் போர்ஸ் -1' என்ற ஜனாதிபதியின் விமானத்தில் பாதுகாப்புக்குறித்து பொது அச்சுறுத்தல்கள் இருந்ததாகக் கூறிய வெள்ளை மாளிகை அதிகாரி பிட்ஸ் லாட்டர் மேல் விவரங்களைத் தெரிவிக்க மறுத்துவிட்டார் மத்திய கிழக்கு மாநாடு இதற்குக் காரணமாக இருக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டார். (06(

## மாவீரர் தினத்தையொட்டி விசாரணைகள் ஒத்திவைப்பு

மாவீரர் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை சகல ஆரம்ப நீதிமன்ற, மேன் முறையீட்டு இணக்க மன்று விசாரணைகளும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

சகல ஆரம்ப நீதி மன்ற மேன் முறையீட்டு இணக்க மன்று உறுப்பினர்கள்

**740 ம மற்றிக்தொன்...**

'கெயர்' ஸ்தாபனத்துடன் தொடர்புடைய குடாநாட்டில் உள்ள நிறுவனங்களுக்கு

வடக்கு கிழக்கு நிலைமைகளால்

# மின்சார சபைக்குத் தினமும் பத்துலட்சம் ரூபா நட்டமாம்

வடக்கு கிழக்கு இராணுவ நடவடிக்கையால் இலங்கை மின்சார சபைக்கு நாளொன்றிற்கு 10லட்சம் ரூபா நட்டம் ஏற்படுவதாக மின்சார சபை வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

இப்பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதாகவும், சிவில் நிர்வாகம் செயலிழந்ததாலும் மின்சார நிலுவைப் பணத்தை அறவிட முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் மூலம் மின்சார சபைக்கு 220கோடி ரூபா பாக்கியிருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு கிழக்கில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள சில பகுதிகளுக்கு மின்சாரம் வழங்க எடுகளும் நடவடிக்கைகளையும் சரியாகச் செயற்படுத்த முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (05

## வெளிச்சக்தியின் மிரட்டல் அடிபணியோம் - ஜனாதிபதி

''எந்த வெளிநாட்டுச் சக்தியின் மிரட்டலுக்கும் ஸ்ரீலங்கா அரசு அடிபணியமாட்டாது. எந்த அச்சுறுத்தலையும் துணிவுடன் எதிர்கொள்வோம்''

இவ்வாறு ஜனாதிபதி பிரேமதாஸ தெற்கில் கமுனசிங்புர எழுச்சிக் கிராமம் என்ற கிராமத்தை திறந்து வைத்து பேசுகையில் தெரிவித்தார்.

வெளிநாட்டிலிருந்தும் உள்நாட்டிலிருந்தும் அச்சுறுத்தல் ஏற்பட்டாலும் அதை துணிவுடன் எதிர் கொள்வோம் என்றார் ஜனாதிபதி.

## தாய் சொல்லைத்தட்டும் தனயன்

## சு. க. செயலர் நியமனத்தில் நிலவும் இழுபறி

சீனாவில் விஜயத்தை மேற்கொண்டிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோபண்டாரநாயக்கா பயணத்தை இடைநடுவில் நிறுத்திக் கொண்டு நாடு திரும்பியுள்ளார்

உட்கட்சிக்குள் பூசல் வலுவுற்ற நிலையில் சீனா புறப்பட்ட திருமதி பண்டாரநாயக்கா தர்மசிறி சேனநாயகாவை அதற்கு முன்னர் கட்சியின் பொதுச்செயலாளராக நியமித்திருந்தார்

தனது மகள் சந்திரிகா விஜயகுமாரணதுங்காவை கட்சிக்குள் பிரபல்யப்படுத்தும் எண்ணம் அவருக்கு மிகுந்துள்ளதாகவும் இதனால் மகன் அனுராபண்டாரநாயக்காவுடனான கருத்து வேறுபாடு முற்றியுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அம்பாறையில் அவலம்

## பட்டினியால் வாடும் மக்களிடம் படம் கேட்கும் படையினர்

அம்பாறை மாவட்டத்திலுள்ள கரையோரத் தமிழ்ப் பிரதேசங்களான அக்கரைப்பற்று, தம்பிலுவில், திருக்கோவில். விநாயகபுரம் போன்ற பகுதிகள் அடிக்கடி ஸ்ரீலங்கா படையினரின் சுற்றிவளைப்புக்கு உள்ளாகி வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் இப்பகுதிகளில் வாழும் தொழிலாளர்கள் தத்தமது வேலைகளுக்குச் செல்ல முடியாமல் கஷ்டமடைந்து வருகின்றனர்.

விசாரணைக்குக் கூட்டிச் செல்லப்படும் தொழிலாளர்களிடம், அவர்களை அடையாளம் கண்டு கொள்ள புகைப் படப் பிரதியொன்றை ஒப்படைக்குமாறு படையினர் வற்புறுத்துகின்றனராம்.

உணவு, உடைக்கே அவஸ்தைப்படுகின்ற இந் நிலையில் புகைப்படம் எடுப்பது எப்படி? என்று தொழிலாளர்கள் வேதனை தெரிவிக்கின்றனர். 06

**சுற்றிவளைப்பு..**

இதேநேரம் இரு பொம்மர்கள் மட்டக்களப்பு பகுதியெங்கும் தாளப்பறந்து வட்டமிட்டன 06

**விடுதலைப்...**

விடுதலைப் புலிகளுக்கு அமைச்சர் எழுதிய கடிதத்தில் வட, கிழக்குப் பிச்சினை பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண அடிப்படை அம்சங்களை வெளியிடுமாறு கேட்டிருந்தார்.

விடுதலைப் புலிகள் பதில் கடிதத்தில் கூறியுள்ள நிபந்

## பாக். பிரதமருக்கு எதிராக பண மோசடி குற்றச்சாட்டு

தெற்காசியப் பிராந்தியத்தில் பெரும் சர்ச்சைக்குள்ளான மனிதராக வர்ணிக்கப்பட்டுவரும் பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷெரீப் பலகோடிக் கணக்கான ரூபா மோசடியில் சம்பந்தப்பட்டுள்ளவரா?

இக்கேள்வி பெரும் பரபரப்பை உண்டுபண்ணியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாகிஸ்தானில் உள்ள நிதி நிறுவனமொன்றில் நிகழ்ந்த பல கோடி ரூபா பணமோசடியில் ஷெரீப் சம்பந்தப்பட்டுள்ளார் என எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன.

முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் திருமதி பெனாஸிர் பூட்டோ ஷெரீபிற்கு எதிரானவர்களுக்கு உத்வேகம் அளித்து வருவதும் இங்கு குறிப்பிடப்படுகிறது.

சார்க் மாநாடு நடாத்த

## ஒத்துழைப்புக் கேட்டு மாலைதீவு அமைச்சர் பயணம்

கொழும்பில் விரைவில் 6ஆவது சார்க் மாநாட்டை நடாத்தஒத்துழைப்புக் கேட்டு மாலைதீவு வெளியுறவு அமைச்சர் இந்தியா நேபாளம்

மாலைதீவு ஜனாதிபதி கயூமின் விசேட பணிப்பின் பேரில் இவர் இம் மூன்று நாடுகளுக்கும் விரைவில் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படு

### 74ம் மெற்றிக்தொன்...

'கெயர்' ஸ்தாபனத்துடன் தொடர்புடைய குடாநாட்டில் உள்ள நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் என கெயர் ஸ்தாபன உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். 06. 10

### தமிழர்...

"தமிழர்களுடைய பிரச்சினையை மனிதாபிமான முறையில் அணுகவேண்டும். அவர்களது அடிப்படை உரிமைகளை வழங்க வேண்டும். அந்த வகையிலதான் செயற்பாடு அமைய வேண்டும்" என்றும் அவர் இக்கட்டத்தில் வலியுறுத்தினார்.

### இராணுவ...

ளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் போது இராணுவத்தில் விசேட படைப் பிரிவினருக்கு பலத்த ஆட்சேதம் ஏற்பட்டது. இதனால் புதியவர்களைச் சேர்ப்பது அவசியமாகிறது. என இராணுவ தரப்பை மேற்கோள்காட்டி இப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது,

நீதி நிர்வாகப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

சகல ஆரம்ப நீதி மன்ற மேன் முறையீட்டு இணக்க மன்று உறுப்பினர்கள் பொறுப்பாளர்கள், உதவியாளர்கள் இத்தினத்தில் அட்டளுதி அரசியல் பொறுப்பாளருடன் தொடர்பு கொண்டு மாவீரர் தினத்திற்குரிய ஒழுங்குகளைச் செய்யுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### நேர்...

கொண்டமை குறித்து தமிழ் மாணவர்கள் அதிருப்தி தெரிவித்தனர். 06

### கோடிக்கணக்கில்...

தது ஒன்றும் ஆச்சரியப்படத்தக்கதல்ல வெளிநாட்டமைச்சர் ஹரல்ட் ஹேரத் மன்னரிடம் உத்தியோகபூர்வ அழைப்பை நேரில் கையளிக்கவில்லை ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணையில் ஜனாதிபதிக்கு சாதகமாகச் செயற்பட அவர் அவசர அவசரமாக அங்கிருந்து அழைக்கப்பட்டதே இதற்குக் காரணம் என்றும் அவர் கூறினார்.

காண அடிப்படை அம்சங்களை வெளியிடுமாறு கேட்டிருந்தார்.

விடுதலைப் புலிகள் பதில் கடிதத்தில் கூறியுள்ள நிபந்தனைகள் பற்றி வினவிய போது 'தயவுசெய்து எனக்கு அவகாசம் தாருங்கள்' என்று அமைச்சர் சொன்னதாகவும் மேற்படி ஆங்கில பத்திரிகை தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளிடமிருந்து கிடைத்துள்ள கடிதத்தை தாம் நன்கு ஆராய்ந்து வருவதாக அமைச்சர் தொண்டமான் குறிப்பிட்டதாக இந்திய வானொலி நேற்றிரவு இச்செய்தியை உறுதிப்படுத்தியது

### அரசுடன் பகிர்வதா? அல்லது...

இதேவேளை சமரச முயற்சியை அரசுடன் பகிர்ந்து கொள்வதா அல்லது சொந்த முயற்சியாகத் தாமே மேற்கொள்வதா என்பது குறித்தும் ஆலோசித்து வருவதாக திரு. தொண்டமான் குறிப்பிட்டதாக நேற்றிரவு பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது

இதேவேளை புலிகளின் வடக்கு கிழக்கு இணைந்த தாயக திட்டத்தை அமைச்சர் திரு. தொண்டமான் ஏற்றுக்கொண்டு விட்டதாக அவர் மீது எதிர்க்கட்சியினர் சீற்றம் கொண்டுள்ளதாக பி. பி. ஸி. கூறியது.

நிறுவனமொன்றில் நிகழ்ந்த பல கோடி ரூபா பணமோசடியில் ஷெரீப் சம்பந்தப்பட்டுள்ளார் என எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன.

இவ் விவகாரத்தில் தனது பெயர் பிரஸ்தாபிக்கப்பட்டாலோ குற்றவாளி என நிரூபணமானாலோ தன் பதவியை ராஜினாமாச் செய்வதாக ஷெரீப் கூறியுள்ளார்.

ஷெரீப் இக் குற்றச்சாட்டின் பேரில் தற்காலிகமாகவாவது பதவியை ராஜினாமாச்செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வற்புறுத்தியுள்ளன.

### க. பொ. த...

என்றும் கல்வி உயர் கல்வி அமைச்சின் செயலாளர் திரு. எம் டி டி. பீரிஸ் அறிவித்துள்ளார்.

அவர் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஏ. துரைராஜாவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

துணைவேந்தர் மேற்படி பரீட்சை தொடர்பாக எழுதிய கடிதத்திற்குச் செயலாளர் அனுப்பிவைத்துள்ள பதில் கடிதத்திலேயே இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

க. பொ. த. சாதாரண பரீட்சை தொடர்பாக வெளிவந்த செய்தி பக்கம் 2 இல்)

கொழும்பில் விரைவில் 6ஆவது சார்க் மாநாட்டை நடாத்த ஒத்துழைப்புக் கேட்டு மாலைதீவு வெளியுறவு அமைச்சர் இந்தியா நேபாளம் பூட்டான் ஆகிய நாடுகளுக்கு செல்லவுள்ளார்.

மாலைதீவு ஜனாதிபதி கயூமின் விசேட பணிப்பின் பேரில் இவர் இம் மூன்று நாடுகளுக்கும் விரைவில் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஆறு அதிபர்களின் சம்பளம் இடைநிறுத்தம்

1990 ஆம் ஆண்டுக்குரிய வருடாந்த பொருள் பதிவேட்டுப் புத்தகப் பிரதிகளை இதுவரை தமக்கு அனுப்பி வைக்காத ஆறு பாடசாலைகளின் அதிபர்களின் சம்பளங்களைத் தமது அறிவித்தல் கிடைக்கும்வரை இடைநிறுத்தி வைக்குமாறு யாழ் கல்விப் பணிப்பாளர் அவ்வக் கோட்டக் கல்வி அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கடந்த ஏழு மாதங்களாக இவ் அதிபர்களிடம் பல தடவைகள் கோரிக்கை விடப்பட்டும் அவர்கள் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (15)

### 3 சின...

கரையிறங்கு படகுகளும் (Landing Craft) 15 ரோந்து படகுகளும் உள்ளன. 9000 பேர் கடற்படையில் உள்ளனர்.

இதேவேளை கிழக்கின் கடற்படை தளபதியாக நியமிக்கப்படவுள்ள மோகான் சமரசேகர இந்தியாவில் உயர் பயிற்சியை முடித்துக்கொண்டு வரவுள்ளதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடற்புலிகளுடன் போராட ஸ்ரீலங்கா கடற்படையை நவீனப்படுத்த வேண்டியிருப்பதாக அதிகாரிகளை மேற்கோள்காட்டி அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## பளையில் கூட்டம்

பளை கொத்தணியைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்களுடனான சந்திப்பு இன்று பகல் 1 மணியளவில் பளை மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக விடுதலைப் புலிகள் மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 12.11.91 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.